# குறிக்கோள், தொழிற்பாடுகள் மற்றும் நிறுவன ரீதியான அமைப்பு



இலங்கை மத்திய வங்கி

# இலங்கை மத்திய வங்கி

# குறிக்கோள்கள், தொழிற்பாடுகள் மற்றும் நிறுவன அமைப்பு

சனவரி 2019

ISBN: 978 955 575 380 - 7

**முகவரி:**

இலங்கை மத்திய வங்கி

இல.30, சனாதிபதி மாவத்தை

கொழும்பு 1

இலங்கை

**தொலைபேசி:**

+94-11-2477000

**வெப்தளம்:**

https://www.cbsl.gov.lk

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1 இலங்கை மத்திய வங்கி | 1 |
| 2 குறிக்கோள்கள் | 1 |
| விலை உறுதிப்பாடு | 2 |
| நிதியியல் முறைமை உறுதிப்பாடு | 2 |
| 3 நாணயச் சபை | 3 |
| 4 தொழிற்பாடுகள் | 4 |
| நாணயக் கொள்கை | 5 |
| நாணயக் கொள்கைக் கருவிகள் | 6 |
| செலாவணி வீதக் கொள்கை | 7 |
| வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவம் | 7 |
| பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு | 8 |
| பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்ற பேரண்ட முன்மதியுடைய கொள்கைக் கருவிகள் | 9 |
| வங்கிகள், நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர்கள் என்பவற்றை மேற்பார்வை செய்தல் | 10 |
| தீர்ப்பனவு வசதிகளை வழங்குதலும் கொடுப்பனவு முறைமையினை ஒழுங்குபடுத்தலும் | 12 |
| நாணயத் தாள்களையும் குற்றிகளையும் வழங்குதல் | 12 |
| அரசாங்கத்தின் வங்கியாளர் மற்றும் நிதியியல் ஆலோசகர் | 13 |
| வர்த்தக வங்கிகளுக்கான வங்கியாளர் | 13 |
| பொதுப்படுகடன் முகாமைத்துவமும் அரசாங்கத்தின் இறைமுகவரும் | 14 |
| ஊழியர் சேம நிதியத்தினை முகாமை செய்தலும் கட்டுக்காப்பும் | 15 |
| வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம் | 15 |
| நிதியியல் வசதிகளுக்கு உட்படுத்தல் மற்றும் சமநிலையான வளர்ச்சியினையும் வசதிப்படுத்தல் | 16 |

பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைக் கண்டுபிடித்தல் மற்றும் தடுத்தலுக்கான நிதியியல் உளவறிதல் பணிகள் 16

**5 நிறுவன அமைப்பு 17**

குழுக்கள் 17

திணைக்களங்கள் 17

இலங்கை மத்திய வங்கியினுடைய திணைக்களங்கள் 18

**6 கிரமமான பத்திரிகை வெளியீடுகள் 23**

**7 வெளியீடுகள் 23**

**8 பிரதேச அலுவலகங்கள் 25**

பிரதேச அலுவலகங்களினது செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ள மாவட்டங்கள் 25

பிரதேச அலுவலகங்களுடன் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் 26

# 1. இலங்கை மத்திய வங்கி

பண ஆணையாளர் சபையினால் ஒதுக்கப்பட்ட மூலதனத்தைப் பயன்படுத்தி 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி[1] நிறுவப்பட்டதோடு அதன் தொழிற்பாடுகள் 1950ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. இலங்கை நிதியியல் முறைமையின் உச்ச நிறுவனமாக இலங்கை மத்திய வங்கி இருக்கின்றதோடு இலங்கை ரூபாவின் பெறுமதி மற்றும் நாட்டினுடைய நிதியியல் முறைமை என்பனவற்றின் உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கும் பொறுப்பாக இருக்கின்றது.

# 2. குறிக்கோள்கள்

மத்திய வங்கியின் குறிக்கோள்களும் தொழிற்பாடுகளும் மாற்றமடைகின்ற பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்ப அதன் உருவாக்கத்திலிருந்து படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளன. இலங்கை மத்திய வங்கித் தொழிலுடன் இசைந்து செல்கின்ற விதத்தில் இரண்டு பிரதான குறிக்கோள்களையும் தொடர்வதற்கு அதனை இயலச்செய்யும் வகையில் 2002ஆம் ஆண்டின் நாணயவிதிச் சட்டத்தின் திருத்தத்தினூடாக மத்திய வங்கியின் குறிக்கோள்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டன.

இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்களின் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான நோக்குடன் மத்திய வங்கி பின்வருவனவற்றை அடைந்து கொள்வதனை குறிக்கோள்களாகக் கொண்டிருக்கிறது.

- பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாடு, அத்துடன்
- நிதியியல் முறைமை உறுதிப்பாடு

2002ஆம் ஆண்டின் நாணயவிதிச் சட்டத்தினை திருத்துவதற்கு முன்னர், உள்நாட்டு நாணயத்தின் பெறுமதியை உறுதிப்படுத்தல், செலாவணி வீத உறுதிப்பாட்டினைப் பேணுதல், உயர்ந்தளவிலான உற்பத்தி, தொழில்நிலை மற்றும் உண்மை வருமானத்தை உயர்வடையச் செய்தல் மற்றும் உற்பத்தியாக்க மூலவளங்களின் முழுமையான அபிவிருத்தியை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல் போன்ற பல்வேறு குறிக்கோள்களை மத்திய வங்கி கொண்டிருந்தது. இத்தகைய பல்வேறான குறிக்கோள்கள் சிலவேளைகளில் முரண்பட்டவையாகவோ அல்லது ஒன்றுடனொன்று இசைந்து செல்லாதவையாகவோ காணப்பட்டன. அதேவேளை, விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டினைப் பேண வேண்டும் என்பதே மத்திய வங்கியினுடைய முதன்மைக் குறிக்கோளாக காணப்படுதல் வேண்டுமென்ற பன்னாட்டு ரீதியான ஓர் இணக்கப்பாடு விருத்தியடைந்தது. விலை உறுதிப்பாடானது நிலையான பேரண்டப் பொருளாதார நிலைமைகளில் மிக முக்கியமாக தங்கியிருப்பதனால் இலங்கை மத்திய வங்கியின் முதன்மையான குறிக்கோள்களில் ஒன்றாக "பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு" குறித்துரைக்கப்படுகிறது.

மேலும், பொருளாதார உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கு நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு மிக முக்கியமானதாக இருக்கின்றது என்பதை அனுபவம் எடுத்துக்காட்டுகின்றது. ஆகவே, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணுதல் என்பது இலங்கை மத்திய வங்கியின் முக்கியமானதொரு குறிக்கோளாக இனங்காணப்பட்டது. இந்த இரண்டு குறிக்கோள்களும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டுள்ளதோடு, ஒரு குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு மற்றைய குறிக்கோளின் பங்களிப்பு முக்கியமானதாகவுள்ளது. நாணயக் கொள்கையானது நிதியியல் இடையேற்பாட்டாளர்கள் (நிறுவனங்கள்) ஊடாக பரிமாற்றப்படுகின்றமையால் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவது விலை உறுதிப்பாட்டிற்கு மிக முக்கியமானதாகும். பொதுவிலை மட்டத்தில்

1. 1985 வரை சிலோன் மத்திய வங்கி என அழைக்கப்பட்டது.

ஏற்படும் மாற்றத்திற்கேற்ப வட்டி வீதங்கள், செலாவணி வீதங்கள் மற்றும் ஏனைய சொத்து விலைகள் நகர்வதனால் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு முக்கியமாக விலை உறுதிப்பாடு காணப்படுகின்றது. நீடித்துநிலைத்திருக்கும் பொருளாதார வளர்ச்சிக்கு பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு அவசியமாக இருக்கின்றது. ஆகவே, மேற்படி இரு குறிக்கோள்களும் ஒன்றுடனொன்று இணக்கத்தன்மையாக உள்ளதோடு இதன் மூலம், மத்திய வங்கியை தனது பிரதான தொழிற்பாடுகளை வினைத்திறனாக செயற்படுத்த இயலுமைப்படுத்தத்தக்கதாகவும் காணப்படுகிறது. தனது குறிக்கோள்களை அடைவதற்காக இலங்கை மத்திய வங்கிக்கு மிகக்கூடியளவான சுயநிர்ணயம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, இவ்விலக்கினை அடைவதற்காக, மத்திய வங்கி கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது நிதி அமைச்சுடன் நெருங்கிய தொடர்பினை வைத்துள்ளதோடு நிதி அமைச்சின் செயலாளர் இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபையாக உள்ள நாணயச் சபையின் ஓர் அங்கத்தவராகவும் இருக்கிறார்.

## விலை உறுதிப்பாடு

உள்நாட்டு நாணயங்களின் நியதிகளிலும் அதேபோன்று வெளிநாட்டு நாணயங்களின் நியதிகளிலும் கொள்வனவை மேற்கொள்ளல் தொடர்பில் நாணயத்தின் பெறுமதியை பாதுகாத்தல் விலை உறுதிப்பாட்டின் மூலம் நடைபெறுகின்றது. விலை உறுதிப்பாடு அல்லது நிலையான விலை என்பதன் பொருள் குறைந்த உறுதியான பணவீக்கம் என்பதாகும். பணவீக்கம் குறைந்தளவில் இருக்கும் போதும் அது குறைந்த மட்டத்தில் காணப்படுமென எதிர்பார்க்கப்படும் போதும், பொருளாதாரம் சிறப்பாகச் செயற்படும் என்பதனை கடந்தகால அனுபவங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. இத்தகைய சூழ்நிலையில் வட்டி வீதமும் குறைந்தளவிலேயே காணப்படும். அத்தகைய சூழல், பொருளாதாரமானது அதன் உத்தமமான வளர்ச்சி மட்டத்தை அடைவதற்கும், உயர்ந்தளவிலான வேலை வாய்ப்பிற்கும் இட்டுச்செல்கின்றது. இதன் கருத்து யாதெனில், உயர்ந்தளவானதும் தளம்பலுடையதுமான பணவீக்கத்தின் எதிர்க்கணிய பாதிப்புக்களிலிருந்து விடுபடும்போது, நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்கள் மிக நம்பிக்கையுடன் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்வர் என்பதேயாகும். ஆகவே குறைந்தளவான மற்றும் நிலையான பணவீக்கம் அல்லது விலை உறுதிப்பாடு நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கும் வேலை வாய்ப்பிற்கும் வழிவகுக்கின்றது. மத்திய வங்கி பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு நாணயக் கொள்கையைப் பயன்படுத்துகின்றது.

## நிதியியல் முறைமை உறுதிப்பாடு

நிதியியல் முறைமையானது உண்மையான மூன்று மூலங்களைக் கொண்டதாகக் காணப்படுகிறது. நிதி நிறுவனங்கள், நிதிச் சந்தைகள் மற்றும் நிதியியல் உட்கட்டமைப்பு என்பனவே அவை. வளங்களைத் திரட்டல் மற்றும் ஒதுக்கீடு செய்தல், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கொடுப்பனவுகளின் தீர்ப்பனவு என்பன நிதியியல் முறைமையின் பிரதான தொழிற்பாடுகளாக இருக்கின்றன.

தடங்கல் எதுவுமில்லாத வகையில் பொருளாதார செயற்பாடுகள் மேற்கொள்வதனை உறுதியான நிதியிடல் முறைமை இயலுமைப்படுத்துகின்றது. மேலதிகமாக, உறுதியான நிதியியல் முறைமையானது சேமிப்பாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்குச் சாதகமானதொரு சூழலை உருவாக்குகின்றது. ஆகவே, உறுதியான நிதியியல் முறைமையானது செயல்திறன்மிக்க நிதியியல் இடையேற்பாட்டு நிறுவனங்களை ஊக்குவிப்பதுடன் முதலீடு மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றை மேம்படுத்துகின்றது.

# 3. நாணயச் சபை

## ஆளுகை அதிகாரசபை

இலங்கை மத்திய வங்கியானது தனித்துவம் வாய்ந்த சட்டரீதியான கட்டமைப்பாக இருப்பதுடன், நாணயச் சபைக்கு கம்பனி அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பதுடன் அனைத்து அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகள் அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆளுகை அதிகார சபை என்ற வகையில், இலங்கை மத்திய வங்கியின் அனைத்து கொள்கை தீர்மானங்களையும் மேற்கொள்ளல் மற்றும் அதனை முகாமைத்துவம் செய்தல், செயற்படுதல் மற்றும் நிர்வகித்தல் ஆகிய பொறுப்புக்களையும் நாணயச் சபை கொண்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது ஐந்து (5) அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது.

- ஆளுநர்
- நிதியமைச்சின் செயலாளர் (பதவிவழி அலுவலர்)
- மூன்று (3) நிறைவேற்று அலுவலர் அல்லாத அங்கத்தவர்கள்

ஆளுநர் நாணயச் சபையின் தலைவராகச் செயற்படுவதுடன் இலங்கை மத்திய வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும் தொழிற்படுகின்றார். ஆளுநர் மற்றும் நிறைவேற்று அதிகாரமற்ற சபை அங்கத்தவர்கள் ஆகியோர் நிதியமைச்சரின் விதந்துரைப்பின் அடிப்படையில் சனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றனர். ஆளுநர் மற்றும் நிறைவேற்று அதிகாரமற்ற சபை அங்கத்தவர்களின் அலுவலகக் காலம் ஆறு ஆண்டுகளாகும். நாணயச் சபையின் கூட்டத்தை நடத்தத் தேவையான கூட்டநிறைவெண் மூன்று உறுப்பினர்களாகும். நாணயச் சபையினுடைய தீர்மானங்கள் செல்லுபடியாவதற்கு மூன்று அங்கத்தவர்களின் உடன்பாடு தேவைப்படுகின்றது. எனினும், ஏகமனதான தீர்மானம் எடுக்கவேண்டிய தேவை ஏற்படுமிடத்து, சகல ஐந்து அங்கத்தவர்களின் ஒருங்கிணைந்த அங்கீகாரம் அத்தியாவசியமாகும்.

நிதியமைச்சிற்கும் நாணயச் சபைக்குமிடையில் நாணயக் கொள்கை மீது வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுமிடத்து நிதியமைச்சர், நாணயச் சபைக்கு அரசாங்கத்தின் அபிப்பிராயத்திற்கிணங்க கொள்கைகளை பின்பற்றுமாறும் அதற்கான பொறுப்பினை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமென்பது பற்றியும் அறிவிப்பார் என்பதுடன் அரசாங்கத்தின் கொள்கையைப் பின்பற்றுமாறு நாணயச் சபை பணிக்கப்படும்.

நாணயச் சபையானது மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட கணக்காய்வுக் குழுவினை நியமித்திருப்பதுடன் அதன் தலைவராக நிறைவேற்று அதிகாரமற்ற சபை உறுப்பினர் செயற்படுவார். ஏனைய இரு அங்கத்தவர்களும் நிதியியல் தொடர்பாக நிபுணத்துவம் பெற்றவர்களாக இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர்கள் மத்திய வங்கியின் வெளியிலிருந்து அமர்த்தப்படுவார்கள். மத்திய வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் செயன்முறை, உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமாந்தன்மை மற்றும் காத்திரமான தன்மை மற்றும் உள்ளக மற்றும் வெளிவாரிக் கணக்காய்வுச் செயற்பரப்பு மற்றும் பெறுபேறுகளை கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்து தொடர்பில் மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு ஆலோசனைகளை வழங்குகிறது.

# 4. தொழிற்பாடுகள்

## மையத் தொழிற்பாடுகள்

(அ) நாணயக் கொள்கையை மேற்கொள்ளுதல்

(ஆ) செலாவணிவீத கொள்கைகளை மேற்கொள்ளுதல்

(இ) அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளை முகாமை செய்தல்

(ஈ) பேரண்ட நுண்மதியுடைய கண்காணிப்பு

(உ) வங்கிகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட வங்கியல்லா நிதி நிறுவனங்களுக்கு உரிமம் வழங்குதல், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல். அதாவது நிதி நிறுவனங்கள் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள், அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள், பணத்தரகர்கள், மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் (நாணய மாற்றுனர்)

(ஊ) தீர்ப்பனவு வசதிகள் மற்றும் கொடுப்பனவு முறைமைகளினுடைய ஒழுங்குவிதிகளை வழங்குதல்

(எ) நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளை வெளியிடல்

(ஏ) பொருளாதார தரவு மற்றும் புள்ளிவிபரங்களை தொகுத்தல் மற்றும் பரப்புதல்

(ஐ) அரசிற்கான நிதியியல் மதியுரையாளராகவும், வங்கியாளராகவும் தொழிற்படுதல்

(ஒ) வர்த்தக வங்கிகளின் வங்கியாளராகத் தொழிற்படுதல்

## முகவர் தொழிற்பாடுகள்

(அ) பொதுப்படுகடனை முகாமைசெய்தல் மற்றும் அரசின் நிதி முகவராகத் தொழிற்படுதல்

(ஆ) ஊழியர் சேம நிதியத்தினை முகாமை செய்தல் மற்றும் அதன் பாதுகாப்பாளராகத் தொழிற்படல்

(இ) வெளிநாட்டு செலாவணியை முகாமை செய்தல்

(ஈ) நிதியியல் உள்ளடக்கத்திற்கும் சமச்சீரான பொருளாதார வளர்ச்சிக்கும் வசதியளித்தல்.

## நாணயக் கொள்கை

உள்நாட்டுப் பொருளாதாரத்தில் விலை உறுதிப்பாட்டினை அடைந்துகொள்வதற்கு மத்திய வங்கியானது நாணயக் கொள்கையை மேற்கொள்கின்றது. நாணயக் கொள்கையின் தொழிற்பாடு முக்கியமாக செலவு மற்றும் நாணயத்தின் கிடைப்பனவு என்பனவற்றின் செல்வாக்கிற்குட்பட்டதாகக் காணப்படுகிறது. ஆகவே, மத்திய வங்கியானது பல்வேறுபட்ட நாணயக் கொள்கைக் கருவிகளை செயற்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தில் சந்தை வட்டி வீதங்கள் மற்றும் கடன் கிடைப்பனவுத் தன்மை என்பன தீர்மானிக்கப்படுகின்றன. மத்திய வங்கியினுடைய கொள்கை வட்டி வீதங்கள் அதாவது துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என்பன பிரதான நாணயக் கொள்கை கருவிகளாக இருக்கின்றன.

மத்திய வங்கியானது வர்த்தக வங்கிகள் மற்றும் ஏனைய பங்கேற்கும் நிறுவனங்களுடன் (அரச பிணையங்களிலுள்ள தற்போதைய முதனிலை வணிகர்கள் அதேபோன்று ஊழியர் சேம நிதியம்) அதன் சொந்த கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்காக கொள்கை வட்டி வீதங்களை நிர்ணயிப்பதுடன் பின்னர் இந்த வட்டி வீதங்கள் கடன்பாட்டாளர்கள் மற்றும் சேமிப்பாளர்களுக்காக வர்த்தக வங்கிகளினாலும் நிதியியல் நிறுவனங்களினாலும் நிர்ணயிக்கப்படும் வட்டி வீதங்களின் முழு வீச்சிலும் தாக்கத்தினை கொண்டிருக்கும். இந்த மாற்றமானது செலவீடு, முதலீடு மற்றும் பொருளாதாரத்தில் வெளியீட்டுத் தீர்மானங்கள் மற்றும் இறுதியில் உற்பத்திச் செலவும், பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் என்பனவற்றின் மீது செல்வாக்குச் செலுத்துகிறது.

உதாரணமாக, துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதங்களில் ஏற்படும் மாற்றமானது பெரும்பாலும் வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தையில் வட்டி வீதங்களின் மீது உடனடித் தாக்கத்தை ஏற்படுத்தலாம். அழைப்பு வீதங்களில் ஏற்பட்ட மாற்றமானது மிகவும் குறுகிய காலத்தில் திறைசேரி உண்டியல் மூலமான வருமானம் மற்றும் அவர்களுடைய முதன்மை வாடிக்கையாளர்களுக்கு வர்த்தக வங்கிகளினுடைய கடன் வழங்கல் வீதங்கள் போன்ற ஏனைய நெகிழத்தக்க குறுங்கால வீதங்களின் மாற்றல்களுக்கு வழிவகுக்கும். இத்தகைய மாற்றங்களின் காலம் கடந்த தாக்கம் வர்த்தக வங்கிகளினுடைய பொதுவான கடன் வழங்கல் வீதங்கள் நடுத்தரகால அரச பிணையங்களின் மீதான வருமானம் (திறைசேரி முறி) மற்றும் வங்கியினால் வழங்கப்பட்ட வைப்பு வீதங்கள் என்பன மீது தாக்கத்தினை ஏற்படுத்தும். அடுத்தபடியாக, வர்த்தக வங்கிகளினால் வழங்கப்படும் கடன்களின் அளவின் மீது தாக்கம் செலுத்தப்படலாம். சந்தை வட்டி வீதங்களின் மாற்றமானது நிறுவனங்கள் (முதலீட்டிற்காக) மற்றும் வாடிக்கையாளர்கள் (நுகர்வுச் செலவுக்காக) போன்றவர்களிடமிருந்தான கடனிற்கான கேள்வியில் செல்வாக்குச் செலுத்தும். வட்டி வீத மாற்றங்கள் மற்றும் மொத்தக் கேள்வியின் மீதான கொடுகடன் மீதும் அதன் மூலம் விலைகள் மற்றும் வெளியீடுகள் மீது தாக்கத்தினை ஏற்படுத்துவது செயற்பாட்டின் இறுதிப் படிமுறையாக இருக்கும்.

எதிர்கால பணவீக்கமானது விரும்பத்தக்க வீதத்தினைவிட உயரும் என எதிர்பார்க்கப்படுமானால், மத்திய வங்கியானது பணவீக்கத்தினைக் குறைப்பதற்கு அதனுடைய கொள்கை வட்டி வீதங்களை (துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம்) படிப்படியாக உயர்த்தும். அதேபோல எதிர்காலப் பணவீக்கமானது தாங்கக்கூடிய மட்டத்தினைவிட குறையுமென எதிர்பார்க்கப்படுமானால், மத்திய வங்கியானது பொருளாதாரத்தினைத் தூண்டுவதற்காக அதனுடைய கொள்கை வட்டி வீதங்களைக் குறைக்கும்.

பொருளாதார செயலாற்றம் என்ற கோணத்திலிருந்து பார்க்கையில், பொருளாதாரத்தின் கேள்வி பொருளாதாரத்தின் உற்பத்தி இயலாற்றலுடன் இசைந்துசெல்கின்றது என்பதனை உறுதிப்படுத்துகின்ற மட்டத்தில் மத்திய வங்கி வட்டி வீதங்களை (துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம்) நிர்ணயித்துள்ளது. வட்டி வீதங்கள் மிகவும் குறைவானதாக நிர்ணயிக்கப்படுமானால், கேள்வியானது நிரம்பலைவிட அதிகரிக்க வழிவகுத்து பணவீக்க அழுத்தங்களினுடைய தோற்றப்பாடுகளுக்கு வழிவகுக்கலாம். எனவே, பணவீக்கமானது அதிகரிப்பதற்கு வாய்ப்பு உள்ளது. வட்டி வீதங்களானது மிகவும் உயர்வாக நிர்ணயிக்கப்படுமானால், வெளியீடானது தேவையற்ற விதத்தில் குறைவதற்கு வாய்ப்பு உள்ளதுடன் பணவீக்கமானது குறைவதற்கு வாய்ப்புள்ளது.

## நாணயக் கொள்கைக் கருவிகள்

(அ) கொள்கை வட்டி வீதங்கள்: துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என்பன துணைநில் வசதி வீத வீச்சினை உருவாக்குவதுடன் பொதுவாக அழைப்புப் பணச்சந்தை வீதங்களுக்கான கீழ்மட்ட மற்றும் உச்ச மட்டத்தினை உருவாக்குகின்றன. வர்த்தக வங்கிகள், அரச பிணையங்களின் முதனிலை வணிகர்கள், மற்றும் ஊழியர் சேம நிதியம் போன்ற பங்குபற்றும் நிறுவனங்களிடமிருந்து ஓரிரவு வட்டி வீத அடிப்படையில் மத்திய வங்கியானது வைப்புக்களை ஏற்கின்றது. தற்பொழுது அவற்றிற்கு வங்கியானது துணைநில் வைப்பு வசதி வீதத்தில் வட்டியை செலுத்துகின்றது. மத்திய வங்கியில் பிணை உறுதி வழங்கப்படுமிடத்து (திறைசேரி உண்டியல்/ திறைசேரி முறி) ஓரிரவு அடிப்படையில் துணைநில் கடன் வழங்கல் வீதத்தில் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு கடன்களை வழங்குகிறது. இத்தகைய துணைநில் வசதிகள் பங்குபற்றும் நிறுவனங்களுக்கு அவற்றின் தற்றுணிபின்படி கிடைக்கின்றன.

(ஆ) திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்: திறந்த சந்தைத் தொழிற்பாடுகளானவை பணச் சந்தையில் திரவத்தன்மையை வழங்குவதற்கு அல்லது பணச் சந்தைத் திரவத்தன்மையை உறிஞ்சுவதற்கு ஓரிரவு அடிப்படை, கால அடிப்படை அல்லது நிரந்தர அடிப்படையில் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படுகின்றன. திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுகின்ற கருவிகள்: மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் (இதற்கான அரச பிணையங்களாக அதாவது திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் என்பன அடிப்படையான பிணையுறுதிகளாக இருக்கின்றன), அரச பிணையங்களினுடைய கொள்வனவு, அரச பிணையங்களினுடைய விற்பனை, மத்திய வங்கி பிணையங்களினுடைய விற்பனை, மத்திய வங்கியினுடைய பிணையங்களின் இளைப்பாறல், மற்றும் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றம் என்பனவாகும். திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் துணைநில் வீத வீச்சுக்களுக்கிடையில் இருக்க வேண்டும் என மத்திய வங்கி எதிர்பார்க்கின்றது. திறந்த சந்தைத் தொழிற்பாடுகளானவை மத்திய வங்கியினுடைய தற்றுணிவில் மேற்கொள்ளப்படுகின்றதுடன் அவை பணச் சந்தை திரவத்தன்மை நிலைமைகளின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் விதத்தில் இலக்கிடப்படுகின்றமையின் மூலம் கொள்கை வீத வீச்சுக்கிடையிலுள்ள ஒரு மட்டத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தினை நிலைப்படுத்துவதற்கு மத்திய வங்கிக்கு உதவும் விதத்தில் அவை நிலவுகின்ற நாணயக்கொள்கை நிலையுடன் விகித சமப்படுத்தப்படுகின்றன.

(இ) நியதி ஒதுக்கு வீதம்: மத்திய வங்கியில் வைப்புச் செய்வதற்கு அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்ற நியதி ஒதுக்கு விகிதமானது ரூபாவினால் குறித்துரைக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் கேள்வி, சேமிப்புக்கள் மற்றும் கால வைப்புக்களினுடைய வீதத்தினை குறித்துரைக்கின்றது. நிதியியல் முறைமையினுடைய கடன் தொழிற்பாடுகளால் உருவாக்கப்பட்ட பணத்தின் அளவினைக் கட்டுப்படுத்துவதற்கு நியதி ஒதுக்கு விகிதம் விதிக்கப்படுகின்றது.

(ஈ) வங்கி வீதம்: திரவத்தன்மைப் பிரச்சனைகள் இருக்கும் வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கி கடனாக வழங்குகின்ற பணத்திற்கு அறவிடப்படுகின்ற வட்டி வீதமாக இது காணப்படுகின்றது. வங்கி வீதமானது துணைநில் கடன் வசதியளித்தல் வீதத்தினைவிட உயர்வாக இருக்கின்றது மற்றும் அது ஒரு தண்ட வட்டி வீதமாகும்.

(உ) வெளிநாட்டு செலாவணித் தொழிற்பாடுகள்: மத்திய வங்கியானது வெளிநாட்டு நாணயத்தினை கொள்வனவு செய்யும் போது இது ரூபாவின் திரவத்தன்மை உட்பாய்ச்சலின் மீது தாக்கத்தினையும் வெளிநாட்டு நாணயத்தினை விற்பனை செய்யும் போது அது ரூபாவின் திரவத்தன்மை வெளிப்பாய்ச்சலின் மீது தாக்கத்தினையும் கொண்டிருக்கிறது. மேலும், மத்திய வங்கியானது எதிர்காலத் திகதியொன்றில் வெளிநாட்டு நாணயங்களை மீண்டும் விற்கலாம்/ வாங்கலாம் என்ற உத்தரவாதத்துடன் வெளிநாட்டு நாணயங்களை கொள்வனவு செய்கின்ற/ விற்பனை செய்கின்ற வெளிநாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கைகளில் நுழையலாம்.

(ஊ) கொடுகடன் மீதான கணியம்சார் கட்டுப்படுத்தல்கள்: மத்திய வங்கியானது வங்கிகளினுடைய கடன் வளர்ச்சி மீது கட்டுப்படுத்தல்களை விதிக்கமுடியுமெனினும், அத்தகைய கட்டுப்பாடுகளை மத்திய வங்கி பொதுவாக பயன்படுத்தப்படுவதில்லை.

(எ) தார்மீகப் பொறுப்பு: தொடர்பூட்டல் என்பது காத்திரமான முறையில் அது பயன்படுத்தப்படும்போது பொருளாதாரத்தில் வேறுபட்ட ஆர்வலர்களின் எதிர்பார்க்கைகளில் செல்வாக்குச் செலுத்தக் கூடியதாக இருப்பதுடன் எடுத்துக்காட்டாக இதன் மூலம் பல்வேறு சொத்து விலைகள் மற்றும் கூலிகள் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றதுடன், இதன் காரணமாக பணவீக்க பெறுபேறுகள் மீது தாக்கம் செலுத்துகின்றதுடன், மத்திய வங்கிக்குக் கிடைக்கப்பெறுகின்ற மற்றுமொரு மேலுமொரு கருவியாகவும் காணப்படுகின்றது.

## செலாவணி வீதக் கொள்கை

மிதக்கும் செலாவணி வீத முறைமையொன்று தற்போது நடைமுறையில் உள்ளது. அதற்கமைய, செலாவணி வீதமானது பொருளாதாரத்தின் பேரண்டப் பொருளாதார அடிப்படைகளைப் பிரதிபலிக்கின்ற கேள்வி மற்றும் வழங்கல் சந்தை விலைகளினால் நிர்ணயிக்கப்படுகின்றது. செலாவணி வீதத்திலுள்ள அளவுக்கதிகமான தளம்பலினைத் தடுப்பதற்கும் வெளிநாட்டு ஒதுக்குகளை திருப்திகரமான மட்டத்தில் பேணுவதற்கும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி முக்கியமாகத் தலையிடுகின்றது. மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் என்பன சந்தை வீதங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

## வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவம்

நாட்டின் அலுவல்சார் ஒதுக்குகளை மத்திய வங்கி முகாமை செய்கின்றது. மத்திய வங்கியானது திரவ வெளிநாட்டு நாணயங்களில் போதுமான வெளிநாட்டு செலாவணி நாணய ஒதுக்குகளையும் நடைமுறைப் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்களில் ரூபாவின் பன்னாட்டு உறுதிப்பாட்டினையும் சுயாதீனமான தன்மையினையும் பேணுவதற்கு தங்கத்தில் சிறிய ஒதுக்கினையும் பேண வேண்டுமென்று நாணய விதிச் சட்டம் எடுத்துரைக்கின்றது.

திரவத்தன்மை மற்றும் நாட்டின் சொத்துகள் மீதான வருவாய் வீதம் என்பவற்றிற்கிடையில் பொருத்தமான சமநிலையொன்றை பேணுகின்ற விதத்தில் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள் பன்னாட்டு பணச் சந்தைகளிலும் மூலதனச் சந்தைகளிலும் முதலிடப்படுகின்றன. வெளிநாட்டு ஒதுக்கின் பெரும்பாலான பகுதி நிலையான வருமான பிணையங்களில் (வெளிநாட்டு அரசாங்க பிணையங்கள்) முதலிடப்பட்டுள்ளது. எஞ்சியவை வெளிநாட்டு நிலையான வைப்புகள், அழைப்பு மற்றும் நடைமுறைக் கணக்குகள் மற்றும் தங்கம் என்பனவற்றில் முதலிடப்பட்டுள்ளன. தற்போது, ஒதுக்குகள் ஐக்கிய அமெரிக்க டொலரில் பிரதானமாக வைக்கப்பட்டுள்ளதுடன் இதற்கு மேலதிகமாக யூரோ, யப்பானிய யென், அவுஸ்திரேலிய டொலர், சீன யுவான் மற்றும் நியுசிலாந்து டொலர் போன்ற வேறு முக்கிய நாணயங்களிலும் வைக்கப்பட்டுள்ளன. பொதுப்படுகடன் மீள் கொடுப்பனவு மற்றும் வேறு திரவத்தன்மை தேவைப்பாடுகள் மற்றும் நாணயங்களின் விளைவு உருவாக்க இயலளவு என்பன நாணய உள்ளமைப்பினை நிர்ணயிப்பதில் முக்கியமாகக் கருத்திற்கொள்ளப்படுகின்றன.

## பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்பு

நிதியியல் முறைமை உறுதிப்பாடு பற்றிய அதன் பொறுப்பாணையின் பாகமொன்றாக, இலங்கை மத்திய வங்கியானது நிதியியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு வழிவகுக்கக்கூடிய பரவக்கூடிய இடர்நேர்வினை மட்டுப்படுத்தும் நோக்குடன், உண்மைப் பொருளாதாரத்துடனான அதன் இடைத்தொடர்பினைக் கரிசனையில் கொண்டு ஒட்டுமொத்த நிதியியல் முறைமையின் கண்காணிப்பினையும் மேற்பார்வையினையும் மேற்கொள்கின்றது. பரவக்கூடிய இடர்நேர்வென்பது ஒட்டுமொத்த நிதியியல் முறைமைக்கு ஆபத்தின்றி உள்ளடக்கப்படக் கூடிய முறைமையினுள் ஒரு நிறுவனத்துடன் அல்லது குழுவுடன் இணையப்பெற்றதாகவன்றி ஒட்டுமொத்த நிதியியல் முறைமையின் வீழ்ச்சியினை அல்லது விளைவினை தோற்றுவிக்கின்ற இடர்நேர்வாகும். பேரண்ட முன்மதிமிக்க ஒழுங்குமுறைப்படுத்தலானது பரவக்கூடிய இடர்நேர்வுகளைக் கையாளுகின்ற அதேவேளை, நுண்பாக முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தலானது தனிப்பட்ட நிறுவன/ குழும இடர்நேர்வுகளைக் கையாளுகின்றது. பேரண்டப் பொருளாதார கொள்கைக்கும் நுண்பாக முன்மதியுடைய ஒழுங்குபடுத்தலுக்குமிடையிலான இடைவெளியினை பேரண்ட முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல் நிரப்புகின்றதென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நிதியியல் பணிகளை வழங்குவதற்குப் பரந்தளவிலான இடையூறுகளைக் கொண்டதும் ஒட்டுமொத்த நிதியியல் முறைமையில் வீழ்ச்சியினை ஏற்படுத்துகின்ற இடர்நேர்வானது பொதுவாக பொருளாதாரத்திற்கு மிகப் பாதகமான விளைவுகளைக் கொண்டிருக்கக் கூடுமென்பதால் பேரண்ட முன்மதியுடைய கொள்கையின் முக்கிய வகிபாகமென்பது நிதியியல் முறைமையின் மூலம் அளவுக்கதிகமான இடர்நேர்வு ஏற்படுவதனை கட்டுப்படுத்துவதேயாகும்

பரவும் இடர்நேர்வுகள், காலப் பரிமாணத்தினை அல்லது ஒவ்வொரு பிரிவுகளுக்கிடையிலான பரிமாணத்தினைக் கொண்டிருக்கக் கூடும்.

அ) காலப் பரிமாணமானது தொடர்பான காலப்பகுதியில் பரவும் இடர்நேர்வின் படிப்படியான பரிணாமத் தோற்றத்துடன் தொடர்புபட்டதாகும். இது, நிதியியல் முறைமைக்கும் உண்மைப் பொருளாதாரத்திற்குமிடையிலான பின்னூட்டலின் துவாரங்கள் காரணமாக திரண்ட இடர்நேர்வுகள் குவிகின்ற ஒரே திசையிலான சுழற்சியுடன் தொடர்பானதாகும். நிதியியல் விசைகள் பொருளாதார விரிவுபடுத்தல்களை தூண்டி அதற்கு ஊட்டமளிக்கலாம். நீடித்து நிலைத்திராத அபிவிருத்திகள், கொடுகடன் மற்றும் சொத்து விலை மற்றும் வளர்ச்சிகளைத் தோற்றுவித்து அதிகரிக்கின்ற இடர் ஏற்புகளுடன் கூடிய துரிதமான கொடுகடன் மற்றும் சொத்து விலை வளர்ச்சியினைக் காண்பிக்கக் கூடியதாகும். இதனால் பங்கு/ பங்கு மூலதனம், உண்மைச் சொத்து, தங்கம் போன்ற சொத்துச் சந்தைகள் உயர்முடுக்கியினையும் விலைத் தளம்பல்களையும் அனுபவிக்கின்றன. எனவே, “செழிப்படைகின்ற” காலப்பகுதியொன்றின்போது நிதியியல் முறைமையானது தேவையான மூலதனத்தையும் திரவத்தன்மைத் தாங்கியிருப்புகளையும் கட்டியெழுப்ப வேண்டும், இது, சொத்து விலைகளின் விரிவடைதலை நிலைபெறத்தக்க மட்டங்களினுள் கட்டுப்படுத்துவதற்கு உதவியளிக்கின்ற அதேவேளை, தொடர்ந்து வருகின்ற பொருளாதார வீழ்ச்சியினை எதிர்த்து நிற்பதற்கு அவசியனமானதாகக் காணப்படுகின்றது. எனவே, பரவும் இடர்நேர்வுகளின் இந்நோக்குடன் தொடர்புபடுகின்ற பல கருவிகள், மிதமிஞ்சிய கொடுகடன் வளர்ச்சியை மட்டுப்படுத்துவதற்கும் எதிர்திசையிலான சுழற்சி வழிமுறைகளைத் தடுப்பதற்கும் முன்மதியுடைய கொள்கைகளில் முக்கிய கவனத்தினைச் செலுத்துகின்றன.

ஆ) ஒவ்வொரு பிரிவுக்குமிடையிலான நிதியியல் நிறுவனங்கள், சந்தைகள் மற்றும் உட்கட்டமைப்பு என்பவற்றுக்கிடையில் ஒன்றுக்கொன்றிற்கிடையிலான தொடர்பு, ஒன்றிலொன்று சார்ந்திருத்தல் மற்றும் பொதுவான இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை என்பனவூடாக குறிப்பிட்ட நேரமொன்றில் நிதியியல் முறைமையில் இடர்நேர்வுகள் எவ்வாறு பரவலடைந்துள்ளன என்பதுடன் தொடர்புபடுகின்றது. ஒன்றிலொன்று தங்கியுள்ள தொடர்புகளின் காரணமாக, ஒரு நிறுவனத்தின் தோல்வியானது தொடர்புபட்ட வேறு நிறுவனங்கள் மீது தொடர்ச்சியாகத் தாக்கங்களை ஏற்படுத்தி

ஒட்டுமொத்த நிதியியல் முறைமைகளையும் வீழ்ச்சியடையச் செய்யக்கூடும். பரவக்கூடிய இடர்நேர்வு அம்சங்களைக் கட்டுப்படுத்துகின்ற கொள்கைக் கருவிகளில் அநேகமானவை தனித்தரப்பினர்கள் அல்லது குழுமங்களுக்கான இடர்நேர்வுக்குள்ளாகக்கூடிய வரையறைகளை, உச்ச வரையறை மற்றும் உச்ச எல்லைகள் என்பவற்றுடன் தொடர்புபடுத்துகின்றன. இதற்கு மேலதிகமாக, நிதியியல் இடையேற்பாட்டாளர்களுக்கிடையேயான முழுவதும் உள்ளக - இணைந்த தன்மையினை மதிப்பிடுவதற்கு பல மாதிரிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

நிதியியல் முறைமையின் உறுதிப்பாடானது பேரண்ட முன்மதியுடைய கொள்கைக் கண்காணிப்புக் கட்டமைப்பின் கீழ் பல்வேறு அளவுசார் நுட்பங்களைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது. நிதியியல் முறைமைக்கான இடர்நேர்வுகள், உலக மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரங்களிலுள்ள அத்துடன், குறிப்பாக உண்மைத்துறை, நிதியியல் சந்தைகள் (பணம், முறி, வெளிநாட்டுச் செலாவணி மற்றும் பங்கு மூலதனச் சந்தைகள்), உண்மைச் சொத்து, குறிப்பிட்ட சில பண்டங்களின் சந்தைகள், வங்கிகள், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் நிறுவனத் துறை என்பனவற்றின் அபிவிருத்திகளை உள்ளடக்குகின்ற பல எண்ணிக்கையிலான பேரண்ட முன்மதியுடைய குறிகாட்டிகளூடாக கண்காணிக்கப்படுகின்றன. நிதியியல் முறைமையின் ஆரோக்கியத்தைக் கணிப்பிடுவதற்கும் இடர்நேர்வுகள் கட்டியெழுப்பப்படுவதை அடையாளங்காண்பதற்கும் நிதியியல் உறுதிப்படுத்தல் குறிகாட்டி, பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டுக் குறிகாட்டி, நிதியியல் சந்தை உறுதிப்பாட்டுக் குறிகாட்டி மற்றும் வங்கித்தொழில் ஆற்றல்வாய்ந்த தன்மைக் குறிகாட்டி போன்ற பல கலப்புக் குறிகாட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, நிதியியல் நிறுவனங்கள் மத்தியில் ஒன்றுடனொன்று இணைந்துள்ள தன்மையினையும் இடர்நேர்வு செறிவுகளையும் இனங்காண்பதற்கு வலையமைப்புப் பகுப்பாய்வு பயன்படுத்தப்படுகின்றது. நிதியியல் நிறுவனங்களின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மதிப்பிடுவதற்கு அழுத்தப் பரீட்சிப்புக்கள் பயன்படுத்தப்படுகின்றன. ரூபாவின் செலாவணி வீத அசைவுகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற நிதியியல் முறைமைக்கு ஏற்படக்கூடிய இடர்நேர்வுகள் மற்றும் பாதிக்கப்படும் தன்மை என்பவற்றை இனங்காண்பதற்கு முன்கூட்டிய எச்சரிக்கைக் குறிகாட்டி முறைமையொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

### பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்ற பேரண்ட முன்மதியுடைய கொள்கைக் கருவிகள்

- பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான உச்ச வரம்பு, சாத்தியமான கால வேறுபாடு
- அளவுத் தேவைப்பாடுகளின் குறைந்தபட்சம், சாத்தியமான கால வேறுபாடு
- முதிர்ச்சிப் பொருத்தப்பாட்டின்மை மீதான வரையறைகள்
- வெளிநாட்டு நாணயக் கடன் வழங்கல் மீதான மேலெல்லை
- தேறிய ஆரம்ப நாணய நிலைகள் அல்லது பொருத்தப்பாடின்மைகள் மீதான வரையறைகள்
- சுழற்சி மூலதனத் தேவைப்பாடுகள் எதிர்பாரா செயற்பாடுகள்
- முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நிதியியல் நிறுவனங்களுக்கான மேலதிக மூலதனத் தேவைப்பாடுகள்
- கொடுகடன் அல்லது கொடுகடன் வளர்ச்சி மீதான உச்ச வரம்புகள்

பேரண்ட முன்மதியுடைய சாதனங்கள், முறைமையியல் வாரியான நிதியியல் இடர்நேர்வினை மட்டுப்படுத்துவதற்கு இரு வழிகளில் உதவுகின்றன: முதலாவதாக, நிதியியல் சமநிலையற்ற தன்மைகள் கட்டியெழுப்பப்படுவதை ஊக்கமிழக்கச் செய்தல், தொடர்ந்து வருகின்ற பொருளாதார மந்தநிலையின் போது கூர்மையினையும் தாக்கத்தினையும் அத்துடன் பொருளாதாரத்தின் மீது அவற்றின் பாதிப்புக்களையும் குறைக்கின்ற பாதுகாப்புகளைக் கட்டியெழுப்புதல்; அத்துடன்

இரண்டாவதாக, நிதியியல் முறைமையின் ஒட்டுமொத்தத் தொழிற்பாட்டிற்கு ஊறு விளைவிக்கக்கூடிய தொற்றுகின்ற மூலங்கள் மற்றும் கசிகின்ற இடர்நேர்வுகள் ஆகிய பொதுவான தோற்றப்பாடுகள், இடர்நேர்வு செறிவுகள், இணைப்புக்கள் மற்றும் ஒன்றிலொன்று தங்கியிருக்கின்ற தன்மை என்பவற்றை இனங்கண்டு தீர்ப்பதற்கு உதவுதல்.

பேரண்ட முன்மதியுடைய கொள்கைச் சாதனங்களை, "தன்னியக்கமாக திருத்தக்கூடிய சாதனங்கள் மற்றும் சுயவிருப்பு அடிப்படை திருத்தக்கூடிய சாதனங்கள்" என விரிவாகப் பிரிக்கலாம். தன்னியக்கமாக திருத்தக்கூடிய சாதனங்கள், எதிர்வுகூறத்தக்க விதிகளை அடிப்படையாகக் கொண்டவை. அவை நிதியியல் முறைமையில் சார்பான சுழற்சிப் போக்குகளைத் தடுப்பதற்கு உதவுவதுடன் அதனூடாக இடர்நேர்வுகள் கட்டியெழுப்பப்படாதிருக்க உதவுகின்றன. தன்னியக்கமாக திருத்தக்கூடிய சாதனங்கள் அடிப்படையாகக் காணப்படுகின்ற பொதுவான கோட்பாடானது பாதகமான காலத்தில் வரைவு செய்யக் கூடிய தாங்கிருப்புகளை செழிப்பாகக் கட்டியெழுப்புவதாகும்". சுயவிருப்பு திருத்த சாதனங்கள் என்பது பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்தக்கூடியவர்களின் தீர்மானங்களுக்கு செல்வாக்குச் செலுத்துகின்ற நிதியியல் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை செழிப்பூட்டும் நோக்குடன் நிதியியல் துறையில் இடர்நேர்வுப் போக்கினை மாற்றுவதற்கு தொடர்புடைய அதிகாரிகளின் மதிப்பீடுகளின் அடிப்படையில் பயன்படுத்தக்கூடிய அத்தகைய சாதனங்களாகும். தன்னியக்க நிலைப்படுத்திகள் மற்றும் சுயவிருப்பு திருத்தல் சாதனங்களைக் கொண்ட கொள்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமா என்ற சில சூழ்நிலைகளில் கொள்கை வகுப்பவர்களுக்கு தெளிவாக இருக்கவேண்டிய தேவையற்றிருப்பதால் கலப்பொன்றினைப் பின்பற்றுவது, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கு சிறந்த வழியாக அமையுமென பல ஆராய்ச்சியாளர்கள் வாதிடுகின்றனர். உதாரணமாக பொருளாதாரமானது முக்கிய மாற்றமொன்றை நோக்கி நகர்கின்ற போது அடிப்படை மாற்றங்கள் இடம்பெறுவதன் காரணமாக கொடுகடன் விரிவாக்கமடைகின்றதா என்பதனை இதனால் நியாயப்படுத்தத்தக்கதா என்றும் இதனால், திரண்ட கேள்வியின் மிதமிஞ்சிய விரிவுபடுத்தலின் காரணமானவையென்றும் நிர்ணயிப்பதற்குக் கொள்கை வகுப்போருக்கு கடினமானதாக அமையலாம்.

மத்திய வங்கியானது பல ஆண்டுகளாக பல்வேறு பேரண்ட முன்மதியுடைய வழிமுறைகளை எடுத்துவருகின்றது. இவை, கொடுகடன் வளர்ச்சி மீதான உச்ச வரம்புகள், இயக்கவாற்றல் மிக்க பொதுவான வழங்கல்கள், காலமாறிகளின் மூலதனத் தேவைப்பாடுகள், காலமாறிகளின் எல்லைத் தேவைப்பாடுகள், ஒதுக்குத் தேவைப்பாடுகள், தேறிய திறந்த வெளிநாட்டு நாணய நிலைகள் மீதான வரையறைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. இக்கொள்கை வழிமுறைகளில் சில நாணயக் கொள்கை வழிமுறைகளை எடுப்பதன் வாயிலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற அதேவேளை, ஏனைய வழிமுறைகள், வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள் தொடர்பிலான ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளாக நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆனாலும், அவை நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்கு உதவின.

## வங்கிகள், நிதிக் கம்பனிகள், முதனிலை வணிகர்கள் என்பவற்றை மேற்பார்வை செய்தல்

வங்கித்தொழிலினதும் நிதியியல் முறைமையினதும் பாதுகாப்பினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் ஊக்குவிப்பதற்காகவும் வைப்பாளர்களினதும் முதலீட்டாளர்களினதும் நலன்களைப் பாதுகாப்பதற்காகவும் வங்கிகள், நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர்கள் போன்றவற்றினை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்வது மத்திய வங்கியின் பொறுப்பாகும்.

வங்கிகளை ஒழுங்குபடுத்தலும் மேற்பார்வை செய்தலும் வங்கித்தொழில் சட்டத்தினாலும் நாணய விதிச் சட்டத்தினாலும் ஆளப்படுகின்றன. இலங்கையில் வங்கிகளுக்கு உரிமம் வழங்குகின்ற அதிகாரியாக மத்திய வங்கி காணப்படுவதுடன் இரண்டு வகையான வங்கிகளுக்கு அதாவது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் (இவை சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகளாகும்) ஆகியவற்றிற்கு வங்கித்தொழில் உரிமங்களை வழங்குகின்றது.

வர்த்தக வங்கிகளுக்கும் சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்குமிடையிலான முக்கிய வேறுபாடு வர்த்தக வங்கிகள் பொதுமக்களிடமிருந்து கேள்வி வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கும் (நடைமுறைக் கணக்குகள்) வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் முழுமையான வீச்சில் ஈடுபடுவதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ள அதேவேளை, சிறப்பியல்புவாய்ந்தவை அவ்வாறு அனுமதிக்கப்படவில்லை என்பதேயாகும்.

வங்கிகளின் மேற்பார்வையானது வங்கித்தொழில் மேற்பார்வைக்காக பாசல் குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட வங்கி மேற்பார்வைக்காக பன்னாட்டு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தர நியமங்களை கொண்டதாகும். உலகப் போக்குகளுக்கிசைவாக மத்திய வங்கியானது வங்கிகளின் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வையினை நோக்கி நகர்கின்றது. இவ்வணுகுமுறையானது, வங்கித்தொழில்துறை இடர்நேர்வுகளை இனங்காணுதல், இவ்விடர்நேர்வுகளை முகாமை செய்தல், இவ்விடர்நேர்வுகளைத் தடுப்பதற்கு வங்கிகளின் இயலுமையினை மதிப்பிடுதல் என்பவற்றை முக்கிய கவனத்தில் கொள்கின்றது.

இதன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை தொழிற்பாடுகளின் ஒருபகுதியாக, மத்திய வங்கியானது உரிமமளித்தல், வங்கிகளின் தொழிற்பாடுகள் மற்றும் மூடுதல், வங்கிகளுடன் தொடர்புடைய முன்மதித் தேவைப்பாடுகள், பலவீனமான வங்கிகள் தொடர்பான தீர்மானங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை அமுல்படுத்தல் என்பன மீது பணிப்புரைகளை வழங்குகின்றது.

வங்கிகளைத் தொடர்ச்சியாக தலத்திற்கு வெளியே கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை, வங்கிகளின் காலாந்தர தலத்திலான பரீட்சிப்புக்கள், வங்கி முகாமைத்துவத்துடனான கூட்டங்கள், வெளிவாரி கணக்காய்வாளர்களுடனான ஒத்துழைப்பு என்பன மேற்பார்வையின் முக்கிய நுட்பங்களாகும்.

மத்திய வங்கியானது மூலதனப் போதுமை, திரவத்தன்மை, நிறுவன ஆளுகை, இடர்நேர்வு முகாமைத்துவம், பாரிய இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை, சொத்துத் தரம், செயற்படாக் கடன்களுக்கான ஒதுக்கீடுகளை மேற்கொள்ளுதல், தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல்வாங்கல், வருமான இனங்காணல், பங்குச் சொத்தாண்மை, முதலீடு, வெளிநாட்டுக் கடன்பாடுகள், கணக்குகளை வெளிப்படுத்துதல் மற்றும் வங்கிகளின் கணக்காய்வு போன்ற பல எண்ணிக்கையிலான முன்மதியுடைய தேவைப்படுத்தல்களுடனான வங்கிகளின் இணங்குவித்தல்களைக் கண்காணிக்கின்றது. மேலும், வங்கிகளிலுள்ள உள்ளகக் கட்டுப்பாடுகளும் மதிப்பிடப்படுகின்றன.

2018இன் இறுதியில் 26 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் (13 உள்நாட்டு வங்கிகள் மற்றும் 13 வெளிநாட்டு வங்கிகள்) 07 உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் தொழிற்பட்டதுடன் மத்திய வங்கியின் அதிகாரவரம்பின் கீழ் வங்கித்தொழில் வியாபாரத்தினை மேற்கொண்டன.

நிதித் தொழில் சட்டத்தின் கீழ், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை மத்திய வங்கி ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்கின்றது. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பானது வங்கிகளுக்கான கட்டமைப்பிற்கு ஒத்ததாகும். மத்திய வங்கியானது சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் பதிவுசெய்து ஒழுங்குமுறைப்படுத்துகின்றது. 2018 இறுதியிலுள்ளவாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் பதிவுசெய்யப்பட்ட குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் எண்ணிக்கை முறையே 43 மற்றும் 5 ஆகக் காணப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியானது உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் நியமிக்கப்பட்ட அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்கின்றது. 2018இன் இறுதியில் 7 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் 8 தனிநிலைக் கம்பனிகளும் முதனிலை வணிகர்களாக பதிவுசெய்யப்பட்டிருந்தன.

மேலும், ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை நோக்கத்திற்காக நுண்பாக நிதிச் சட்டத்தின் கீழ் நுண்பாக வியாபாரத்தில் ஈடுபடுகின்ற நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கும் செயன்முறையை மத்திய வங்கி முன்னெடுக்கின்றது.

## தீர்ப்பனவு வசதிகளை வழங்குதலும் கொடுப்பனவு முறைமையினை ஒழுங்குபடுத்தலும்

உறுதியான நிதியியல் முறைமையொன்றுக்கு சிறப்பாக தொழிற்படுகின்றதும் பாதுகாப்பானதுமான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை அத்தியாவசியமான உள்ளீடொன்றாகும். 2005இன் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் நியதிகளுக்கமைய, கொடுப்பனவு, தீர்ப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் என்பனவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் மத்திய வங்கிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, தேசிய கொடுப்பனவு முறைமைக்கான திட்டமொன்றினை தயாரிப்பதும் கொடுப்பனவு, தீர்ப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகளை நிறுவுதல் மற்றும் அபிவிருத்தி செய்தலுக்கான வழிகாட்டல் மற்றும் தலைமைத்துவத்தை வழங்குவதும் மத்திய வங்கியின் பொறுப்பாகும். மேலும், இலங்கையில் தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் அபிவிருத்திக்காக பரிந்துரைகளை மேற்கொள்வதற்காக கொடுப்பனவு முறைமைகளிலுள்ள முக்கிய ஆர்வலர்களை உள்ளடக்குகின்ற தேசிய கொடுப்பனவு ஆணைக்குழுவினை மத்திய வங்கி நிறுவியுள்ளது.

இலங்கையில் கணனி முறைமை சார்ந்த முக்கியமான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையொன்றான லங்கா செட்டில் முறைமையினை மத்திய வங்கி தொழிற்படுத்துகின்றது. லங்கா செட்டில் முறைமையானது இரண்டு முறைமைகளை அதாவது அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை மற்றும் லங்கா செக்குயர் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையென்பது தீர்ப்பனவு இடர்நேர்வுகளை இல்லாதொழித்து அதேநேரத்தில் பாரிய பெறுமதிகளைக் கொண்ட மற்றும் நேர முக்கியத்துவமிக்க கொடுப்பனவுகளின் தீர்ப்பனவுகளை வசதிப்படுத்துகின்ற லங்கா செட்டில் முறைமையின் நிதியத் தீர்ப்பனவு கூறொன்றாகும். வங்கிகளுக்கிடையிலான அழைப்புச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் அரசாங்க பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்கள், திறந்த சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் தீர்ப்பனவு இல்லக் கொடுக்கல்வாங்கல்கள் என்பன அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையூடாக தீர்ப்பனவு செய்யப்படும் முக்கிய கொடுப்பனவு வகைகளாகும். லங்கா செக்குயர் என்பது அரசாங்கப் பிணையங்களுக்கான பத்திரங்களற்ற பிணையத் தீர்ப்பனவு முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பக முறைமை என்பவற்றை உள்ளடக்கின்ற பிணையத் தீர்ப்பனவு கூறொன்றாகும். லங்கா செட்டில் முறைமையின் சுமுகமான தொழிற்பாட்டினை உறுதிசெய்வதற்காக மத்திய வங்கி, பங்கேற்பாளர்களுக்கு பிணைய உறுதியளிக்கப்பட்ட அடிப்படையில் ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதிகளை இலவசமாக வழங்குகின்றது.

மத்திய வங்கியும் வர்த்தக வங்கிகளும் இணைந்து சொந்தமாகக்கொண்டுள்ள தேசிய தீர்ப்பனவு இல்லமான லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் தொழிற்படுத்துகின்ற சில்லறைக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை மத்திய வங்கி ஒழுங்குமுறைப்படுத்தி தீர்ப்பனவு வசதிகளை வழங்குகின்றது. சில்லறைக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளாக i) காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் காசோலை சுற்றோட்டக் குறைப்பு முறைமை, ii) இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை, iii) பொதுவான தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆளி, iv) பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி என்பன காணப்படுகின்றன. கொடுப்பனவு அட்டைகள், செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவு மற்றும் QR குறியீடு அடிப்படையிலமைந்த கொடுப்பனவுகள் போன்ற இலத்திரனியல் கொடுப்பனவு சாதனங்கள் அதிகரித்தளவில் பிரபல்யம் அடைவதனால், பாதுகாப்பான முறையொன்றில் அத்தகைய கொடுப்பனவுகள் கொண்டு நடாத்துவதனை உறுதிசெய்வதற்கு வழிகாட்டல்களை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

## நாணயத் தாள்களையும் குற்றிகளையும் வழங்குதல்

ஏதேனும் தொகையின் கொடுப்பனவுக்காக இலங்கையில் சட்ட ரீதியானதாக விளங்குகின்ற நாணயத் தாள்களையும் குற்றிகளையும் வழங்குகின்ற ஏக உரிமையை மத்திய வங்கி கொண்டுள்ளது. நாணய வழங்கல் மீது உயர்ந்தபட்ச வரையறை

எதுவும் விதிக்கப்படவில்லை. நாணய வழங்கலானது முக்கியமாக பணத்துக்கான கொடுக்கல்வாங்கல் கேள்வியினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

நாணயத் தாள்களினதும் குற்றிகளினதும் இன வகை, பரிமாணம் மற்றும் வடிவமைப்பு என்பன நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் ஒப்புதலுடன் நாணய சபையினால் தீர்மானிக்கப்படுகின்றன. நடைமுறையில் மத்திய வங்கியானது ஒன்பது வகைகளில் நாணயத் தாள்களையும் (ரூபாய் 5000, 2000, 1000, 500, 200, 100, 50, 20 மற்றும் 10) மற்றும் 10 குற்றி வகைகளையும் (ரூபாய் 10, 5, 2, மற்றும் 1 சதங்கள் 50, 25, 10, 5, 2 மற்றும் 1) சுற்றோட்டத்தில் விட்டுள்ளது. பெறுமதி கூடிய வகை நாணயத் தாள்கள் போலியானவற்றைக் கண்டுபிடிப்பதற்காக அதிகரித்த பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டுள்ளன. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்களின் தரத்தினைத் தரமுயர்த்துவதற்கு தூய நாணயத்தாள் முயற்சியொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மத்திய வங்கி நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒப்புதலுடன் ஞாபகார்த்த நாணயத் தாள்களையும் குற்றிகளையும் வெளியிடுகின்றது.

## அரசாங்கத்தின் வங்கியாளர் மற்றும் நிதியியல் ஆலோசகர்

அரசாங்கத்திற்கான வங்கியாளரென்ற ரீதியில், மத்திய வங்கியானது அரசாங்கத் திணைக்களங்கள், அரசாங்க முகவராண்மைகள், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் சில நியதிச்சட்ட சபைகள் போன்றவற்றின் கணக்குகளைப் பேணுவதுடன் வங்கித்தொழில் வசதிகளை வழங்குகின்றது. அரசாங்கத்திற்கு தற்காலிக முற்பணங்களையும் மத்திய வங்கி வழங்குகின்றது.

அரசாங்கத்திற்கான நிதியியல் ஆலோசகரென்ற ரீதியில் மத்திய வங்கியின் கொள்கைகளுடன் அதன் கொள்கைகளை ஒருங்கிணைக்கும் நோக்கங்களுக்காக பின்பற்றப்படவேண்டிய வழிமுறைகள் மற்றும் கொள்கைகள் மீது அரசாங்கத்திற்குப் பரிந்துரைகளை மத்திய வங்கி மேற்கொள்ளலாம். இதற்கு மேலதிகமாக, வரவுசெலவுத்திட்ட உரையினைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்துவதற்காக இலங்கையின் நாணய நிலைமை பற்றியும் அத்துடன் மத்திய வங்கியின் நடைமுறை நாணயக் கொள்கையினையும் விவரிக்கின்ற மற்றும் பகுப்பாய்வு செய்கின்ற அதேபோன்று அதன் குறிக்கோள்களை அடைவதற்கு மத்திய வங்கியின் இயலுமையின் மீதான அரசாங்கத்தின் நடைமுறை இறைக் கொள்கையின் தாக்கத்தினை ஆராய்கின்ற இரகசிய அறிக்கையொன்றை ஒவ்வொரு ஆண்டும் செத்தெம்பர் 15 அளவில் நிதி அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

## வர்த்தக வங்கிகளுக்கான வங்கியாளர்

வர்த்தக வங்கிகளுக்கான வங்கியாளரென்ற முறையில், இலங்கை மத்திய வங்கியானது, நடைமுறைக் கணக்கு வசதிகளையும், இக்கணக்குகளுக்கான கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்தல் என்பவற்றையும் அவர்களுக்கு வழங்குகின்றது. அவர்களுக்கு வழங்கப்படும் தீர்ப்பனவு வசதிகள் தொடர்பில், மத்திய வங்கியானது முக்கிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் அதாவது காசோலை பிம்பப்படுத்தல், காசோலை சுற்றோட்டக் குறைப்பு முறைமை, இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை, பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி, தொடர்பில் வர்த்தக வங்கிகள் மத்தியில் தேறிய தீர்ப்பனவுகளை மத்திய வங்கி அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையூடாக மேற்கொள்கின்றது. மத்திய வங்கியின் இத்தொழிற்பாடுகள் உள்நாட்டு நிதியியல் முறைமையின் வினைத்திறனுக்குப் பங்களிக்கின்றது.

அவசர நிலைமைகளின் போது அல்லது நாணய அல்லது வங்கித்தொழில் உறுதிப்பாட்டிற்கு நேரடியான அச்சுறுத்தல்களாக விளங்கக்கூடிய நிதியியல் பதட்டங்கள் காணப்படும் நிதியியல் சார்ந்த அச்சுறுத்தல்களின்போது மத்திய வங்கியானது தற்காலிக திரவத்தன்மைப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்ற வர்த்தக வங்கிகளுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க பிணையுறுதிகளுக்கெதிராக அவசரக் கடன்களை வழங்குகின்றது. இவ்வசதியானது, "இறுதிக் கடன் ஈவோன்" வசதி என பொதுவாக அறியப்படுகின்றது.

## பொதுப்படுகடன் முகாமைத்துவமும் அரசாங்கத்தின் இறை முகவரும்

அரசாங்கத்தின் இறை முகவரென்ற ரீதியில் இலங்கை மத்திய வங்கி நாணய விதிச் சட்டத்தின் 113ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய பொதுப்படுகடன் முகாமைத்துவத்திற்கு பொறுப்புடையதாகும். பொதுப்படுகடன் முகாமைத்துவத்தின் முக்கிய குறிக்கோள், படுகடன் நிலைபெறு தன்மையினை உறுதிசெய்கின்ற முன்மதிமிக்க படுகடன் முகாமைத்துவ உபாயத்திற்கமைவாக நடுத்தர மற்றும் நீண்டகாலத்தில் முன்மதிமிக்க இடர் அளவுடன் சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில் அரசாங்கத்தின் நிதியளித்தல் தேவைகளும் கொடுப்பனவு கடப்பாடுகளும் நிறைவேற்றப்படுகின்றதென்பதனை உறுதி செய்வதாகும்.

மத்திய வங்கியினதும் திறைசேரியினதும் அலுவலர்களை உள்ளடக்கிய அத்துடன் அரசாங்கத்தின் உள்நாட்டு கடன் பெறுதல் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக தீர்மானிப்பதற்கு கிரமமாக சந்திக்கின்ற உள்நாட்டுப் படுகடன் முகாமைத்துவ குழுவினால் பரிந்துரைக்கப்பட்டவாறு வேறுபட்ட முதிர்ச்சிகளைக் கொண்ட குறுகிய கால திறைசேரி உண்டியல்கள் மற்றும் நடுத்தர மற்றும் நீண்டகால திறைசேரி முறிகள் போன்ற அரசாங்க பிணையங்களை வழங்குவதன் மூலம் பொதுமக்களிடமிருந்து நிதியங்களை மத்திய வங்கி திரட்டுகின்றது. உள்நாட்டுத் திறைசேரி கட்டளைச் சட்டத்தின் நியதிகளுக்கமைவாக திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படுகின்ற அதேவேளை, பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் திறைசேரி முறிகள் வழங்கப்படுகின்றன. அரசாங்க பிணையங்களின் முதனிலை வணிகர்களினூடாக திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளை வழங்குவதற்கு மத்திய வங்கியினால் ஏலங்கள் கிரமமாக நடாத்தப்படுகின்றன.

திறைசேரி உண்டியல்களும் திறைசேரி முறிகளும் பத்திரங்களற்ற வடிவில் வழங்கப்படுவதுடன் லங்கா செக்குயரின் கூறொன்றான மத்திய வைப்பகமான மற்றும் அரசாங்க பிணையங்களுக்கான உரித்துப் பதிவகமான மத்திய வைப்பக முறைமையில் பதிவுசெய்யப்படுகின்றன. மேலும், அரசாங்கம் சார்பாக மத்திய வங்கியானது உள்நாட்டுச் சந்தையில் டொலரில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளை வழங்குகின்றது. அமைச்சரவை நியமித்த வழிகாட்டல் குழுக்களினால் பரிந்துரைக்கப்பட்டவாறு, பன்னாட்டு மூலதனச் சந்தைகளில் நடுத்தர/ நீண்டகால நிலையான வீத நாட்டுக்கான பன்னாட்டு முறிகளை வழங்குவதனூடாகவும் நிதியங்கள் திரட்டப்படுகின்றன. இலங்கை அரசாங்கத்தினால் திரட்டப்படும் அனைத்துப் படுகடன்களும் ஒப்புதலளிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட வரையறைகளினுள்ளும் தொடர்புடைய சட்டங்களின் கீழ் அடையாளப்படுத்தப்பட்ட வேறு சட்ட ரீதியான ஏற்பாடுகளினுள்ளும் காணப்படுவதுடன் இலங்கைப் பாராளுமன்றத்தின் முன்கூட்டிய அதிகாரமளித்தலுக்கு உட்பட்டனவையுமாகும்.

மத்திய வங்கியின் படுகடன் திரட்டல் மத்திய வங்கியினாலும் நிதி அமைச்சினாலும் இணைந்து வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ உபாயத்தின் நிர்ணயிக்கப்பட்ட சாராமாறிகளினுள் உள்ளடக்கப்படுகின்றது. மத்திய வங்கியானது 2018இன் 8ஆம் இலக்க தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டவாறு தொடர்பான ஏற்பாடுகளினூடாக இலங்கை அரசாங்கத்தின் படுகடன் இருப்பிலிருந்து குறிப்பாக மீண்டும் மீண்டும் ஏற்படும் இடர்நேர்வினைத் தணிப்பதில், குறிப்பாக பொறுப்புக்களை முகாமைசெய்வதில் ஈடுபடுகின்றது.

## ஊழியர் சேம நிதியத்தின் முகாமைத்துவமும் கட்டுக்காப்பும்

இலங்கையின் பாரிய ஓய்வு நிதியமான ஊழியர் சேம நிதியமானது ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டதாகும். ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய நிதியத்தின் முகாமைத்துவம் அதன் பாதுகாவலனாக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேம நிதியத் திணைக்களமானது ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் கீழ் நாணயச் சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு நிறுவப்பட்டதாகும்.

## வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்

முதலீட்டாளர் நம்பிக்கையினை அதிகரித்தல், வெளிநாட்டு ஒதுக்குகளை வலுப்படுத்தல், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையினை உறுதிப்படுத்தல் ஆகிய நோக்குடன் 1953இன் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் இரத்துச்செய்யப்பட்டு 2017இன் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டமானது 2017.11.20ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்தது. சட்டத்திற்கமைவாக வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை ஊக்குவித்து ஒழுங்குமுறைப்படுத்துவதில் அரசாங்கத்தின் முகவராக மத்திய வங்கி அதன் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் கொண்டு நடாத்துகின்றது.

முக்கிய தொழிற்பாடுகளாக வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல், செலாவணி இறக்குமதி ஏற்றுமதி அதாவது இலங்கை ரூபா மற்றும் வெளிநாட்டு நாணயம், அத்துடன் பொருத்தமான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவதனூடாக வெளிநாட்டு நாணயத்தை உடைமையில் வைத்திருத்தல், வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களைக் கண்காணித்தல் மற்றும் கீழ் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதன் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்/ ஒழுங்குவிதிகள் என்பவற்றுடனான இணங்குவித்தலை உறுதி செய்தல் என்பன காணப்படுகின்றன.

தற்போது, பொருட்கள் மற்றும் பணிகள் வர்த்தகத்துடன் தொடர்புடைய வெளிநாட்டுச் செலாவணியிலமைந்த நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், (உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்) வெளிநாட்டுச் செலாவணியூடாக உரிமையாளரை உறுதிப்படுத்துவதன் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் உரிய விழிப்புக் கவனத்தினைப் பிரயோகிப்பதற்குட்பட்டு தடையின்றி மேற்கொள்வதற்கு சட்டத்தினால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. உண்மை அல்லது நிதியியல் சொத்துக்களை கையேற்பதுடன் தொடர்புடைய மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் (அதாவது, மூலதனக் கணக்குக் கொடுக்கல்வாங்கல்கள்) பகுதியளவில் தாராளமயமாக்கப்பட்டுள்ளன. அனுமதிக்கப்பட்டுள்ள அநேகமான மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் மத்திய வங்கியின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளாது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினூடாக கொண்டு நடாத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

உலக வர்த்தக நடவடிக்கைகளில் இலங்கையினை ஊக்குவிப்பதற்காக, பேரண்டப் பொருளாதாரக் கொள்கை நிலைக்கு அமைவாக வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை குறிப்பாக, மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை மேலும் தாராளமயப்படுத்துவதன் மீது தற்போது கவனம் செலுத்தப்படுகின்றது.

## நிதியியல் வசதிகளுக்கு உட்படுத்தல் மற்றும் சமநிலையான வளர்ச்சியினையும் வசதிப்படுத்தல்

நாட்டில் நிதியியல் வசதிகளுக்கு உட்படுத்தல் மற்றும் சமநிலையான பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கின்ற அத்துடன் நிதியியல் வசதிகளுக்கு உட்படுத்தலை ஊக்குவிக்கின்ற அதேவேளை, பொருளாதாரத்தின் வறிய வகுப்பினருக்கு பல்வேறு வகையான கொடுகடன் துணைச்சேவைகளை வழங்குகின்ற நோக்குடன் பல்வேறு மீள் நிதியளித்தல், வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத்திட்டம் என்பன பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களூடாக அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இச்சலுகை ரீதியான கொடுகடன் திட்டங்கள் மற்றும் கொடுகடன் உத்தரவாதத்திட்டங்களுக்கு மத்திய வங்கி, அரசாங்கம், கொடையாளி முகவராண்மைகள் மற்றும் பங்கேற்பு நிதியியல் நிறுவனங்கள் மூலம் நிதியளிக்கப்படுகின்றன.

மேற்குறித்த திட்டங்களூடாக இலங்கை மத்திய வங்கியானது தாங்கக்கூடிய நிதி வசதிகளை வழங்குவதன் மூலம் வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்பு, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அத்துடன் நுண்பாக நிதித் துறைகள் உள்ளடங்கலாக பரந்தளவிலான துறைகளிலுள்ள தனிப்பட்டவர்களுக்கும் வர்த்தக முயற்சிகளுக்கும் பணியாற்றுகின்றது.

இதற்கு மேலதிகமாக, திறன் அபிவிருத்தி, நிதியியல் அறிவினை மேம்படுத்தல், தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி மற்றும் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப அபிவிருத்தி என்பவற்றை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்படுகின்றன.

கொள்கை நோக்கில், மத்திய வங்கியானது கிராமிய மற்றும் நிதியியல் ரீதியாக உள்ளடக்கப்படாத சமூகங்கள் மத்தியில் காணப்படும் கடன் சுமையினைத் தீர்ப்பதன் வாயிலாக நாட்டில் நிதியியல் வசதிகளுக்குட்படுத்தும் தன்மையினை அதிகரிப்பதன் மீது கவனம் செலுத்துகின்றது. இம்முயற்சியில் மத்திய வங்கியானது தேசிய நிதியியல் உள்ளடக்க உபாயமொன்றினை உருவாக்குவதற்கு ஆரம்பித்துள்ளது. தேசிய நிதியியல் உட்சேர்த்தல் உபாயமானது துண்டாடப்பட்ட அணுகுமுறைகளைக் கொண்டிருப்பதற்குப் பதிலாக நாட்டில் நிதியியல் உட்சேர்த்தலினை மேம்படுத்துவதனை நோக்கி ஒரே திசையில் தொழிற்படுவதற்கு அனைத்து ஆர்வலர்களினாலும் பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை கண்டுபிடித்தல் மற்றும் தடுத்தலுக்கான நிதியியல் உளவறிதல் பணிகள்

இலங்கையின் நிதியில் உளவறிதல் பிரிவானது இலங்கையில் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பிற்கான தேசிய மையமாகும். இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு, 2006இன் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டதாகும். 2006இன் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் அதிகாரங்களைப் பின்பற்றி, நிதியியல் உளவறிதல் பிரிவானது சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் பற்றிய அறிக்கைகளையும் ஆரம்ப நிலையின் அடிப்படையில் அமைந்த அறிக்கைகளையும் பெற்றுக்கொள்கின்றது. சேகரிக்கப்பட்ட மற்றும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களின் அறிக்கைகளின் வாயிலாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தொடர்புடைய தகவல்களை இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு பகுப்பாய்வு செய்து, மதிப்பீடு செய்து பணம் தூயதாக்குதல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பானவற்றை தடுத்தல், கண்டுபிடித்தல், புலனாய்வு செய்தல் மற்றும் வழக்குத் தொடருதல் என்பவற்றை வசதிப்படுத்துவதற்கு மேற்பார்வை அதிகாரிகள் உள்ளடங்கலாக சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் மற்றும் ஏனைய

முகவராண்மைகளுக்கு கிடைக்கச்செய்கின்றது. மேலும், இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவானது 2006இன் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, நிதித் தொழில் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்களில் ஈடுபட்டுள்ள அதன் பெயர் குறிக்கப்பட்ட அறிக்கையிடும் நிறுவனங்கள் தொடர்பில் அவசியமான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது.

# 5. நிறுவன அமைப்பு

## குழுக்கள்

இலங்கை மத்திய வங்கியினுடைய பிரதான தொழிற்பாடுகள் தொடர்பான தீர்மானம் எடுத்தல் செயற்பாட்டில் மத்திய வங்கியினுடைய பின்வரும் குழுக்கள் பிரதான பங்கு வகிக்கின்றன. ஒவ்வொரு குழுக்களுக்கும் சிரேஷ்ட துணை ஆளுநர், துணை ஆளுநர் ஒருவர் அல்லது உதவி ஆளுநர் ஒருவர் தலைமை தாங்குவர்.

- நாணயக் கொள்கைக் குழு
- வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழு
- சந்தைத் தொழிற்பாடுகள் குழு
- நிதியல்லாத இடர்நேர்வு முகாமைத்துவக் குழு
- தேசிய கொடுப்பனவு ஆணைக்குழு
- நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு
- ஊழியர் சேம நிதிய முதலீட்டுக் குழு
- திறைசேரி முறி மற்றும் திறைசேரி உண்டியல் விலைக்கோரல் சபை

வங்கியின் பொதுவான நிர்வாகம் மற்றும் வங்கியின் மனித வளங்களினுடைய அபிவிருத்தி தொடர்பில் நாணயச் சபைக்கு பரிந்துரைகளை மேற்கொள்கின்ற கம்பனி முகாமைத்துவக் குழுவிற்கு ஆளுநர் தலைமை தாங்குகின்றார். பயிற்சிக் குழுவிற்கும் ஆளுநர் தலைமை தாங்குகின்றார்.

## திணைக்களங்கள்

இலங்கை மத்திய வங்கியின் பெரும்பாலான திணைக்களங்கள் "பொருளாதாரக் கொள்கை மதியுரை" வகிபாகம், "நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை" வகிபாகம் மற்றும் "இயலாற்றலைக் கட்டியெழுப்புதல் மற்றும் ஆதரவுப் பணி" வகிபாகம் என்பனவற்றை செயற்படுத்துகின்ற மூன்று கொத்தணிகளுள் ஒன்றைச்சேர்ந்தனவாகவுள்ளன. ஒவ்வொரு கொத்தணியினையும் சிரேஷ்ட துணை ஆளுநர் அல்லது துணை ஆளுநர் ஒருவர் மேற்பார்வையிடுகிறார். கொள்கை மீளாய்வு

மற்றும் கண்காணிப்புத் திணைக்களமும் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களமும் இத்தகைய ஏதேனும் மூன்று கொத்தணிக்குள் சேராமல் இருப்பதுடன் அவ்விரு திணைக்களங்களும் நேரடியாக உதவி ஆளுநரினூடாக ஆளுநரிற்கு அறிக்கையிட முடியும். இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது நேரடியாக இடர்நேர்வு மேற்பார்வை குழுச் சபையினூடாக நாணயச் சபைக்கு அறிக்கையிட வேண்டப்படும். அதேவேளை உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது நேரடியாக மதியுரைக் கணக்காய்வு குழுவினூடாக நாணயச் சபைக்கு அறிக்கையிட வேண்டும். இணங்குவிப்புத் தொழிற்பாடுகள் தொடர்பாக சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களமானது இடர்நேர்வு மேற்பார்வை குழுச்சபைக்கு அறிக்கையிட வேண்டும்.

## இலங்கை மத்திய வங்கியினுடைய திணைக்களங்கள்

| திணைக்களம் | பிரதான தொழிற்பாடுகள்/ பொறுப்புக்கள் |
|---|---|
| வங்கி மேற்பார்வைத் திணைக்களம் | வங்கி முறைமையின் ஆற்றலை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வங்கிகளை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல். |
| வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் | நிதி நிறுவனங்களினுடைய மனிதவளத்தினை விருத்தி செய்வதற்கும் மற்றும் விசேடமாக இலங்கை மத்திய வங்கி அலுவலர்களினுடைய தொழில்நுட்ப தேர்ச்சியை வலுப்படுத்திக் கொள்வதற்கும் மற்றும் ஏனைய நிதி நிறுவன பணியாளர்களுக்கும் பயிற்சித் திட்டங்களை நடாத்துதல். |
| தொடர்பூட்டல் திணைக்களம் | இலங்கை மத்திய வங்கியினுடைய குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு தொடர்பாக எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் ஒழுக்கவிதி அளவீடுகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படுகின்ற முகவர் பணிகள் (செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், ஊழியர் சேம நிதியம், பொதுப்படுகடன் திணைக்களம் மற்றும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ஊடாக) மற்றும் இலங்கை மத்திய வங்கியினுடைய இத்தகைய பொறுப்புக்களுக்கு உரிய தகவல்களை தொடர்பூட்டல். |
| நாணயத் திணைக்களம் | எந்தவொரு பெறுமதிக் கொடுப்பனவிற்காகவும் இலங்கையில் சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளை வெளியிடுவதற்கான இலங்கை மத்திய வங்கியினுடைய பிரத்தியேக உரிமையை செயற்படுத்தல். |
| வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் | உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள், உரிமம்பெற்ற நிதிக் குத்தகைக் கம்பனிகள் மற்றும் உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் மற்றும் முதனிலை வணிகர்களை மேற்பார்வை செய்தல். |

| திணைக்களம் | பிரதான தொழிற்பாடுகள்/ பொறுப்புக்கள் |
|---|---|
| உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் | நாணயக் கொள்கை அளவீடுகளை நடைமுறைப்படுத்தல், பிரதானமாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடாத்துதல் மற்றும் வர்த்தக வங்கிகளின் ஒதுக்குத் தேவைப்பாடுகளை அமுல்படுத்துதல். அரசாங்கம், வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களுக்காக நடைமுறைக்கணக்கு வசதிகளைச் செயற்படுத்தல் மற்றும் அரச வங்கியாகவும் வர்த்தக வங்கிகளின் வங்கியாகவும் செயலாற்றுதல் நாணயக் கொள்கை அமுலாக்க தொழிற்பாட்டில் பலம்மிக்க விலையை நிர்ணயித்துக் கொள்வதற்கு அங்கீகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்களை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல். |
| பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் | விலை மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டை பேணுவதற்கு நாணயக் கொள்கையினுடைய உருவாக்கம் மற்றும் அமுலாக்கத்தை வசதிப்படுத்தும் நோக்குடன் தரவுத் தொகுப்பு, கொள்கை ஆய்வு மற்றும் விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சியினூடாக தனித்துவமான கொள்கை ஆலோசனைகளை சரியான நேரத்தில் ஆளுநருக்கும் நாணயச் சபைக்கும் வழங்குதல். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பேரண்ட பொருளாதார தரவுகளையும் தகவல்களையும் பொதுமக்களுக்கு பரப்புவதற்கான சட்ட ரீதியான பொறுப்பினையும் கொண்டிருக்கிறது. |
| ஊழியர் சேம நிதியத் திணைக்களம் | உறுப்பினர்களினுடைய பங்களிப்புக்கள் மற்றும் கட்டணங்களைச் சேகரித்தல், உறுப்பினர்களுடைய கணக்குகள் மற்றும் பொதுக் கணக்குகளை பேணுதல், மிகையான நிதியினை முதலீடு செய்தல், உறுப்பினர் கணக்குகளுக்கு வட்டியினை வரவு வைத்தல், பயன்பெறுனர்களுக்கு நன்மைகளைக் கொடுப்பனவு செய்தல் மற்றும் நிதியத்தின் ஆண்டுக் கணக்குகளை தயாரித்தல். |
| வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் | அலுவலர்களினுடைய செயல்திறனை மேம்படுத்துவதற்கான மனதிற்குகந்த சூழலை உருவாக்கும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியினுடைய வளாகங்களைப் பேணுதல் மற்றும் வங்கியானது எதுவித தடைகளுமின்றி அதனுடைய தொழிற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு இயலச்செய்யும் வகையில் வசதிகள் மற்றும் பணிகளை வழங்குதல். |
| நிதித் திணைக்களம் | கணக்கியல் மற்றும் நிதியியல் அறிக்கையிடல், வரவுசெலவுத் திட்டக் கட்டுப்பாடு, பொதுப் பணிகளுக்கு கொடுப்பனவு செய்தல் மற்றும் ஊழியர்களுக்கான சம்பளங்களை கொடுப்பனவு செய்தல், மத்திய வங்கியினுடைய உள்ளக நிதியினை முகாமை செய்தல் மற்றும் அரசாங்கம் சார்பாக வெளிநாட்டுக் கடன்களுக்கு பணத்தினை வழங்குதல் மற்றும் மீள்கொடுப்பனவு செய்தல். |

| திணைக்களம் | பிரதான தொழிற்பாடுகள்/ பொறுப்புக்கள் |
| --- | --- |
| வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் | இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் சரியான முறையில் மேம்படுத்தல் என்பனவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்கில் வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தினுடைய ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல். |
| மனித வளங்கள் திணைக்களம் | அலுவலர்களை ஆட்சேர்த்தல், பணிக்கமர்த்தல், பதவியுயர்வை வழங்குதல் மற்றும் செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல் |
| தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் | இலங்கை மத்திய வங்கியினுடைய தொழிற்பாடுகளுக்கு வசதியளிப்பதோடு தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்குவதன் மூலம் இத்தகைய தொழிற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கான செயல்திறனை உயர்த்துதல் |
| உள்ளகக் கணக்காய்வு திணைக்களம் | உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாடுகளைச் செயற்படுத்தல் |
| பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் | அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளை முகாமை செய்தல் |
| சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் | சட்டத்தினுடைய உறுதித்தன்மை மற்றும் சமகாலத்தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ளல் மற்றும் இலங்கை மத்திய வங்கியினுடைய செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ள கட்டமைப்புக்களை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மத்திய வங்கியின் சட்டம் தொடர்பான ஈடுபாடுகளைப் பாதுகாத்தல், இலங்கை மத்திய வங்கி முழுவதிலும் வினைத்திறனான இணங்குவிப்புக்களை உறுதிப்படுத்திக் கொள்ளுகின்ற விதத்தில் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை மேற்கொள்ளல். |
| பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் | உள்நாட்டு நிதியியல் முறைமையின் முறையியல் சார்ந்த இடர்நேர்வுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் உள்நாட்டு நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்திக் கொள்ளும் விதத்தில் கொள்கை வழிகளை பரிந்துரை செய்தல். |
| கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் | சிறந்த செயற்பாட்டினையும் பாதுகாப்பான தேசிய கொடுப்பனவு முறைமையினையும் உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்கில் கொடுப்பனவு தீர்ப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் மற்றும் கொடுப்பனவினை அபிவிருத்தி செய்தல் தீர்ப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகளுக்காக வழிகாட்டலையும் தலைமைத்துவத்தையும் வழங்கல் |
| கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் | இலங்கை மத்திய வங்கியினுடைய உபாயத் திட்டத்தினை தயாரித்தல் மற்றும் உபாயத் திட்டத்தின் அடிப்படையில் முன்னேற்றப் போக்கினைக் கண்காணித்தல் |

| திணைக்களம் | பிரதான தொழிற்பாடுகள்/ பொறுப்புக்கள் |
|---|---|
| பொதுப்படுகடன் திணைக்களம் | வருடாந்த நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தின்படி, அரசாங்கத்தினுடைய மொத்தக் கடன்பெறல் தேவைப்பாட்டினை எதிர்கொள்வதற்கு நிதியினைத் திரட்டுதல், நிதியமைச்சுடன் நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ உபாயத்தினை உருவாக்குதல், உரிய நேரத்தில் அரச படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவை மேற்கொள்ளல், அரச பிணைகளினுடைய சீரான தீர்ப்பனவிற்கு வசதியளிப்பதற்காக லங்காசெக்குயர் முறைமையினைப் பேணுதல் மற்றும் மத்திய வைப்பக முறைமையில் அரச பிணையங்களின் பதிவேட்டைப் பேணுதல் |
| பிரதேச அபிவிருத்தி திணைக்களம் | இலங்கையின் சமச்சீரான பொருளாதார வளர்ச்சி மற்றும் நிதியியல் உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கான அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்தல். |
| பிரதேச அலுவலக முகாமைத்துவத் திணைக்களம் | பிரதேச அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கியினுடைய பிரதேச அலுவலகங்களின் செயற்பாடுகளைக் கண்காணித்து மேற்பார்வை செய்துவருகிறது. |
| தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் | வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளின் தீர்மானங்கள் தொடர்பில் தொழிற்பாடுகளை மேற்கொள்ளல், அங்கீகாரமளிக்கப்படாத நிதி வியாபாரங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட திட்டங்கள் மீது நடவடிக்கை எடுத்தல் மற்றும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டம் தொடர்பான தொழிற்பாடுகளை மேற்கொள்ளல் |
| இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களம் | இலங்கை மத்திய வங்கியின் ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை பலம்பெறச் செய்தல். |
| செயலகத் திணைக்களம் | கொள்வனவு முகாமைத்துவம், அகற்றல் முகாமைத்துவம், விடுப்பு முகாமைத்துவம், நிகழ்ச்சி முகாமைத்துவம் ஊடாக இலங்கை மத்திய வங்கியின் கம்பனி நிர்வாகத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் ஓய்வூதிய நிதியினை நிர்வகித்தல். |
| பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் | மத்திய வங்கியினுடைய பணிமனைகளுக்கும் நாணயங்களை கொண்டுசெல்லும் போதும் பாதுகாப்பினை வழங்குதல். |
| அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் | அலுவலர்களுக்கு நலன்புரி வசதிகளை வழங்குதல். |

| திணைக்களம் | பிரதான தொழிற்பாடுகள்/ பொறுப்புக்கள் |
|---|---|
| புள்ளிவிபரத் திணைக்களம் | சமூகப் பொருளாதார புள்ளி விபரங்களைத் தொகுத்தல், ஆய்வுசெய்தல் மற்றும் எதிர்வுகூறல் மற்றும் அளவீடுகளை நடாத்துதல். |
| பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் | இலங்கை மத்திய வங்கியினுடைய மனித வளத்தினை விருத்தி செய்தல் |

| | |
|---|---|
| நிதியியல் உளவறிதற் பிரிவு (நிர்வாக நோக்கத்திற்காக மட்டுமே இலங்கை மத்திய வங்கியின் திணைக்களம் ஒன்றாக இது கருதப்படுகிறது) | 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடும் சட்டத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதிகளுக்கு நிதியளித்தல் மற்றும் ஏனைய சட்டரீதியற்ற செயற்பாடுகளுக்கு சாதகமான தொடர்புகளைத் தவிர்க்கும் நோக்கத்திற்காக நிதி கொடுக்கல்வாங்கல் மீதான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் பெற்றுக் கொள்ளல். மேலே குறிப்பிடப்பட்ட சட்டரீதியற்ற செயற்பாடுகள் தொடர்பாக சந்தேகத்திற்கிடமான நிதிக் கொடுக்கல்வாங்கல்களை ஆய்வு செய்தல் மற்றும் விசாரணைக்காக பொருத்தமான சட்ட நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகளுக்கு அத்தகைய ஆய்வுகளினுடைய தகவல்களைப் பரப்புதல். |

## 6. கிரமமான பத்திரிகை வெளியீடு

- வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம்
- அரச பிணையங்கள்
- பணவீக்கம்
- நாணயக் கொள்கை மீளாய்வு
- திறந்த சந்தை தொழிற்பாடுகள்
- கொள்வனவு முகாமையாளர்கள் சுட்டெண் அளவீடு

## 7. வெளியீடுகள்

- ஆண்டறிக்கை
- நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு
- அண்மைய பொருளாதார விருத்திகள்
- மாதாந்த செய்தித் திரட்டு
- இலங்கையின் பொருளாதார, சமூக புள்ளி விபரங்கள்
- கொடுப்பனவு செய்தித் திரட்டு
- உயர் அலுவலர் ஆய்வுத் தொடர்
- சடஹன
- நியூசேர்வே
- வைப்பகம்

- இலங்கையின் சமூக பொருளாதாரத் தரவு ஏடு
- 60ஆம் ஆண்டு நிறைவு ஞாபகார்த்தத் தொகுதி
- 40ஆம் ஆண்டு நிறைவு ஞாபகார்த்தத் தொகுதி
- 1950 - 1975 ஞாபகார்த்தத் தொகுதி
- சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டுத் தொடர்
- இலங்கையில் வியாபாரத்தினைச் செய்யுங்கள்
- சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகத்தினை தொடங்குவோம்
- இலங்கை மத்திய வங்கி குறிக்கோள்கள், தொழிற்பாடுகள் மற்றும் நிறுவன அமைப்பு
- இலங்கையில் நிதியியல் பணிகளுக்கான ஒரு வழிகாட்டி (2004)
- லங்காசெக்குயர் (2004)
- இலங்கையின் நாணயக் குத்திகள் மற்றும் தாள்களின் வரலாறு (2000)
- பன்னாட்டு வர்த்தகம் (2001)
- 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் விதிகள்
- உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு ஏற்புடைத்தான பணிப்புரைகள், விதிகள், தீர்மானங்கள், அறிவித்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள்
- 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கு விடும் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்
- விலை உறுதிப்பாடு (2005) - துண்டுப் பிரசுரம் தொடர் இல.1
- நிதியியல் முறைமை உறுதிப்பாடு (2005) துண்டுப் பிரசுரம் தொடர் இல.2
- செலாவணி வீதம் (2006) - துண்டுப் பிரசுரம் தொடர் இல.3

- பிரமிட் திட்டங்களினால் உருவாக்கப்பட்ட ஆபத்துக்கள் மற்றும் வலையமைப்பு சந்தைப்படுத்தல் திட்டங்கள் (2006) துண்டுப் பிரசுரம் தொடர் இல.4
- பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்கள் (2006) - துண்டுப் பிரகாரம் தொடர் இல.5
- பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் (2006) - துண்டுப் பிரகாரம் தொடர் இல.6
- லங்காசெக்குயர் (2006) - துண்டுப் பிரகாரம் தொடர் இல.7

# 8. பிரதேச அலுவலகங்கள்

## பிரதேச அலுவலகங்களினது செயற்பாடுகள் பின்வரும் மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது

**பிரதேச அலுவலகம் - மாத்தறை :** காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்கள்

**பிரதேச அலுவலகம் - அநுராதபுரம்:** அநுராதபுரம், பொலனறுவை, புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்கள்

**பிரதேச அலுவலகம் - மாத்தளை:** கண்டி, மாத்தளை மற்றும் கேகாலை மாவட்டங்கள்

**பிரதேச அலுவலகம் - திருகோணமலை:** திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்கள்

**பிரதேச அலுவலகம் - கிளிநொச்சி:** கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்கள்

**பிரதேச அலுவலகம் - நுவரெலியா:** நுவரெலியா, மொனராகலை மற்றும் பதுளை மாவட்டங்கள்

மேல் மாகாணத்திலுள்ள கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களானது பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களத்தினால் உள்ளடக்கப்படுகின்றன.

## பிரதேச அலுவலகங்களுடன் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்

### அநுராதபுரம்

இல.341, 1 வது கட்டடம், அநுராதபுரம்

தொலைபேசி : 025 2222024

தொலைநகல் : 025 2225689

மின்னஞ்சல் : nihalw@cbsl.lk

### கிளிநொச்சி

அறிவியல் நகர், கிளிநொச்சி

தொலைபேசி : 021 2285912

தொலைநகல் : 021 2285911

மின்னஞ்சல் : rokn@cbsl.lk

### மாத்தளை

இல.805, திருகோணமலை வீதி, மந்தண்டாவல, மாத்தளை

தொலைபேசி : 066 2222167

தொலைநகல் : 066 2222175

மின்னஞ்சல் : romatale@cbsl.lk

### மாத்தறை

இல.35, தர்மபால மாவத்தை, மாத்தறை

தொலைபேசி : 041 2222269

தொலைநகல் : 041 2222719

மின்னஞ்சல் : romatara@cbsl.lk

### நுவரெலியா

இல.84, பதுளை வீதி, நுவரெலியா

தொலைபேசி : 052 3059002

தொலைநகல் : 052 2224294

மின்னஞ்சல் : ronuwaraeliya@cbsl.lk

### திருகோணமலை

இல.103, அஞ்சல் அலுவலக வீதி, திருகோணமலை

தொலைபேசி : 026 2226966

தொலைநகல் : 026 2226967

மின்னஞ்சல் : rotrinco@cbsl.lk



ISBN 978-955-575-380-7